# மங்காபுரம் தனில்



மங்காபுரம் தனில் உறைகின்ற ஸ்ரீதேவியே ,

மங்காத புகழ்தனை எனக்களித்திடுவாய்நீயே !

மங்காபுரம்.....

பாற்கடல்தனை அனைவரும் கடைந்திட,

மலர்மீது அழகுற தோன்றியவள் நீயே;

நாற்புரமும் மாந்தர்கள் நின்புகழ் பாடிட,

அலர்மேல் மங்கையென திகழ்கின்றாயே !

மங்காபுரம்.......

சுகமுனிவர் உனக்குத் துணைபுரிந்திட,

திருமலைவாஸன் கரம்பிடித்தாயன்று;

சுகங்கள் எம் வாழ்வதனில்நிறைந்திட,

திருவருள் புரிந்திடுவாய் எமக்கின்று !

மங்காபுரம்.....